யபிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

20 03 2025 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பார்சி இன மக்களின் புத்தாண்டு தினமான நவ்ரோஸ் பண்டிகையை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.
- சுகாதாரம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்புத் துறைகளில் லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இணைந்து செயல்பட வாய்ப்புள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- தமிழக அரசின் நடவடிக்கைகளால் மாநிலத்தில் குற்றச்சம்பவங்கள் குறைந்துள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.
- சாம்பியன் கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு, 58 கோடி ரூபாய் பரிசுத்தொகையை பிசிசிஐ அறிவித்துள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<>>>>>>**

பார்சி இன மக்களின் புத்தாண்டு தினமான நவ்ரோஸ் பண்டிகையை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த நன்நாளில் மக்கள் மகிழ்ச்சி, செழிப்பு மற்றும் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வாழ்த்துவதாக கூறியுள்ளார்.

வரும் ஆண்டு வெற்றி, முன்னேற்றம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமையட்டும் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>>**

தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதிக்க வலியுறுத்தி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நாடாளுமன்ற இரு அவைகளும் பிற்பகல் இரண்டு மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

மக்களவை இன்று காலை கூடியதும், அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து தொகுதி மறுசீரமைப்பு குறித்து விவாதிக்க வேண்டும் என திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

ஆனால், இதற்கு அனுமதி மறுக்கப்பட்டதையடுத்து, அமளி நிலவியதால் அவை நடவடிக்கைகள் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

பின்னர் அவை மீண்டும் கூடியபோதும் அமளி நீடித்ததால், பிற்பகல் இரண்டு மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

இதேபிரச்சினை காரணமாக மாநிலங்களவையும் முதலில் நண்பகல் 12 மணிவரையும், பின்னர் பிற்பகல் இரண்டு மணிவரையும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னதாக, தொகுதி மறுசீரமைப்பு குறித்து நாடாளுமன்ற வளாகத்திலும் திமுக உறுப்பினர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

<<<<<<>>>>>>

சுகாதாரம், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் இலத்தின் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று இந்திய தொழில் கூட்டமைப்பு மாநாட்டில் பங்கேற்று பேசிய அவர், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் புத்தொழில் துறையிலும் இணைந்து செயல்பட வாய்ப்புள்ளதாக கூறினார்.

சுரங்கம், கட்டமைப்பு வசதி மற்றும் பாதுகாப்புத்துறைகளிலும் கூட்டாக செயல்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

உலக பொருளாதாரம் தற்போது நிலையற்றதாக உள்ளது என்று குறிப்பிட்ட திரு ஜெய்சங்கர், கோவிட் பெருந்தொற்று பாதிப்பு வளரும் நாடுகளில் நீண்டகால பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கரை இன்று புதுதில்லியில் உள்ள அவரது இல்லத்தில் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பின்போது, நாடாளுமன்ற கூட்டத்தொடர் குறித்து சில ஆக்கப்பூர்வமான கருத்துக்களை குடியரசு துணைத்தலைவருடன் பரிமாறிக் கொண்டதாக திரு எல். முருகன் தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் மாநில அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் குற்றச்சம்பவங்கள் குறைந்துள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பான விவாதத்திற்கு பதிலளித்து பேசிய அவர், குற்ற வழக்குகளில் எந்தவித பாரபட்சமும் காட்டப்படுவதில்லை என்றார்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

முந்தைய அஇஅதிமுக ஆட்சிக்காலத்திலதான் அதிக குற்றச்சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஈரோடு அருகே சரித்திர பதிவேடு குற்றவாளி கொலை வழக்கில், காவல்துறை உடனடி நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பழி வாங்கும் நோக்கில் இந்த கொலைச்சம்பவம் நடைபெற்றதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் டாஸ்மாக் நிறுவனத்தில் நடத்தப்பட்ட சோதனை தொடர்பாக, இம்மாதம் 25-ஆம் தேதிவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என அமலாக்கத்துறைக்கு, சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

டாஸ்மாக் மதுபான விற்பனையில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடு தொடர்பாக அந்நிறுவனத்தின் தலைமை அலுவலகம், உயர் அதிகாரிகள் மற்றும் மதுபான ஆலை உரிமையாளர்களுக்கு சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை அண்மையில் சோதனை மேற்கொண்டது.

இந்த சோதனை தொடர்பாக சட்ட விரோத பணப்பரிமாற்ற தடை சட்டத்தின்கீழ், அமலாக்கத்துறை நடவடிக்கை எடுப்பதற்கு தடை விதிக்கக்கோரி டாஸ்மாக் நிறுவனம் சார்பில், தாக்கல் செய்யப்பட்ட மனுவை

விசாரித்த நீதிபதிகள் திரு எம் எஸ் ரமேஷ் மற்றும் திரு செந்தில்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த மனு மீதான விசாரணை வரும் 25-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுவதாகவும் அதுவரை டாஸ்மாக் அதிகாரிகள் உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் உத்தரவிட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

உலக சிட்டுக்குருவி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

சிட்டுக்குருவிகளை அழிவிலிருந்து பாதுகாக்கும் நோக்கில், "சிட்டுக்குருவியை நான் நேசிக்கிறேன்" என்பதே இந்த ஆண்டின் மையக்கருத்தாகும்.

இந்நாளையொட்டி, மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், சிட்டுக்குருவிகள் எழுப்பும் இனிமையான ஒலி நமது உள்ளத்தை மட்டுமின்றி, சுற்றுப்புற சூழலையும் ஆக்கப்பூர்வமானதாக மாற்றுவதாக குறிப்பிட்டுள்ளார்.

தனித்துவம் வாய்ந்த சிட்டுக்குருவிகள் அழியும் நிலையில் இருப்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், இந்த அழகான மற்றும் சிறிய பறவையை காப்பாற்ற சிட்டுக்குருவி தினத்தில் நாம் உறுதியேற்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

பற்கள் மற்றும் வாய் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பற்களின் ஆரோக்கியத்தை பாதுகாப்பதன்மூலம், பல்வேறு நோய்கள் வராமல் தடுக்கலாம் என்று பல் மருத்துவர் திரு **'Kalid Ghiaz '** எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - **Kalid Ghiaz** – 37 செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>>**

பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு பெண் குழந்தைகளை காப்போம் - அவர்களுக்கு கல்வி கற்பிப்போம் இயக்கத்தை செயல்படுத்தி வருகிறது.

இதன் ஒருபகுதியாக, தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில், காவல்துறை சார்பில் வாணியம்பாடி அரசு பள்ளி மாணவிகளுக்கு தற்காப்பு பயிற்சி அளிக்கப்பட்டு, வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - அனுராதா – 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

முப்படைகளில் பணியாற்றும் வீரர்களின் மனநல ஆரோக்கியம் தொடர்பாக, ஆயுதப்படை மருத்துவ சேவை அமைப்புக்கும், **NIMHANS** தேசிய மனநல ஆரோக்கியம் மற்றும் நரம்பியல் நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

ஆயுதப்படை மருத்துவ சேவை அமைப்பின் தலைமை இயக்குனர் வைஸ் அட்மிரல் ஆர்த்தி செரின் மற்றும் **NIMHANS** நிறுவனத்தின் இயக்குனர் டாக்டர் பிரதீமா மூர்த்தியும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சாம்பியன் கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு, 58 கோடி ரூபாய் பரிசுத்தொகையை பிசிசிஐ அறிவித்துள்ளது.

சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டி முழுவதும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய அணி வீரர்கள், இதற்கு காரணமான பயிற்சியாளர்கள் மற்றும் தேர்வுக்குழு உறுப்பினர்களுக்கும் இந்த பரிசுத்தொகை வழங்கப்படும் என்று பிசிசிஐ வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

அகமதாபாத்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆரியன்ஷா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-2, 6-2 என்ற செட் கணக்கில் அஜய் மாலிக்கை வென்றார்.

இந்தியாவின் பிரஜ்வல்தேவும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<>>>>>>